27.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>விருதுநகர் மாவட்டத்தில் குதிரைவாலி விதைப்பண்ணை சாகுபடியை அதிகரிக்க ரூ.25 லட்சம் ஒதுக்கீடு</u>

விருதுநகர் மாவட்டத்தில் பாரம்பரிய தானிய வகையான குதிரைவாலி விதைப்பண்ணையம் மூலம் சாகுபடி செய்யும் பரப்பளவை அதிகரிக்கச் செய்யும் வகையில் சமச்சீர் வளர்ச்சி நிதி ரூ.25 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் பாரம்பரிய தானிய வகைகளை பயிர் செய்வதற்கு வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அதேபோல், விருதுநகர் மாவட்டத்திலும் தானிய வகையான குதிரைவாலிச் சாகுபடி மேற்கொள்வதற்கும், விதைப்பண்ணையம் அமைப்பதற்கும் வேளாண்மைத் துறை மூலம் வத்திராயிருப்பு வட்டார பகுதி மானாவாரி விளைநிலங்கள் கடந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டன. இதில், வேளாண்மை பல்கலை ஆராய்ச்சி மையத்திலிருந்து குதிரைவாலி விதை 260 கிலோ வாங்கி அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை என்கிற அளவில் தேர்வு செய்யப் பட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. வத்திராயிருப்பு பகுதியில் குதிரைவாலி விதைப்பண்ணை தவிர்த்து, இம்மாவட்டத்தில் மொத்தம் 900 ஹெக்டேரில் மானாவாரியில் பயிரிட்டதில் எதிர்பார்த்ததை விட சாகுபடி கிடைத்தது. இதில், விதைப்பண்ணையத்தில் சாகுபடி செய்ததில் தரமான குதிரைவாலி விதை கிடைத்ததால் வேளாண்மை விதை ஆய்வு மையம் மூலம் சுத்தகரிப்பு செய்து, தமிழகத்தில் அனைத்து வேளாண்மை விதை மையத்திற்கும் விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஏறகனவே இம்மாவட்டப் பகுதியில் குதிரைவாலி

சாகுபடி செய்யும் பரப்பளவும் கடந்த 2012-13ல் 850 ஹேக்டேரும், 2013-14ல் 900 ஹெக்டேரும் மற்றும் 2014-15ல் 1800 ஹெக்டேராகவும் அதிகரிக்க உள்ளது. இது குறித்து வேளாண்மைத்துறை இணை இயக்குநர் எஸ்.சுப்பையா கூறியதாவது: கடந்தாண்டு நீர்வள நிலவளத்திட்டம் சார்பில் கோவை வேளாண்மை விதை ஆராய்ச்சி மையத்திலிருந்து 260 கிலோ குதிரைவாலி விதை வாங்கி வத்திராயிருப்பு பகுதி உள்ளிட்ட பகுதியில் விதைப்பண்ணையம் அமைத்து சிறு, குறு விவசாயிகள் தேர்வு செய்து ஒரு ஏக்கருக்கு 2 கிலோ மூலம் விநியோகம் செய்தோம். இதில், சாகுபடி எதிர்பார்த்ததை விட 20 டன் விதை கிடைத்தது. இதை, தமிழகம் முழுவதும் விதை மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பயிர் மானாவாரியில் தண்ணீர், உரம் இல்லாமல் 3 மாதத்திற்குள் சாகுபடி செய்யும் குறுகிய கால பயிராகும். இதன் தேவையும் அதிகரித்துள்ளதால் கூடுதல் விலையும் கிடைக்கிறது. இம்மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டார பகுதியிலும் குதிரைவாலி விதைப்பண்ணை சாகுபடி செய்யும் பரப்பளவை அதிகரிப்பதற்காக நிகழாண்டில் சமச்சீர் வளர்ச்சி நிதி மூலம் ரூ.25 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பட்டுப்புழு வளர்ப்பு: த.பழூர் விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் பட்டுப்புழு வளர்ச்சித் துறை மூலம் "அட்மா" திட்டத்தின் கீழ் பட்டுப்புழு வளர்ப்புக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் தா.பழூர் விவசாயிகள் உடுமலைப்பேட்டைக்கு கண்டுணர்வு சுற்றுலா சென்று வந்தனர். பட்டு வளர்ச்சித்துறையின் உதவி ஆய்வாளர் உலகநாதன் தலைமையில், வெளிமாவட்ட விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா மூலம் உடுமலைப் பேட்டை பகுதியில் உள்ள குறிச்சிக்கோட்டைக்கு 25 பேர் சென்றனர். இதில், மானுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பட்டுப்புழு வளர்ப்பு விவசாயி பாலசுப்பிரமணியன், "இளம்பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மல்பெரி'

சாகுபடி மேற்கொண்ட வயலை சுற்றுலா சென்ற விவசாயிகள் பார்வையிட்டனர். இதுகுறித்து,பாலசுப்பிரமணியன் விவசாயிகளிடம் கூறியதாவது: இளம்பட்டுப்புழு வளர்ப்பு காலம் என்பது முட்டை பொரித்த நாள் முதல் 2ஆம் தோலுரிப்பு வரையிலான காலமாகும். மேலும்,பட்டுப்புழுக்களுக்கு நீர்ச்சத்து மற்றும் ஊட்டச்சத்து மிகுந்த இளம் மல்பெரி இலைகளை புழுக்கள் உண்ணும் அளவிற்கு இலைகள் சிறியதாக நறுக்கி உணவாக வழங்க வேண்டும். கோடை காலங்களில் இளம்புழு வளர்ப்பு அறையின் சுவர் ஓரமும், புழு வளர்ப்பு தாங்கிகளின் அடியிலும் மணலை பரப்பி தண்ணீர் தெளித்து ஈரப்பதத்தை பாதுகாக்க லாம். மேலும் இளம்பட்டுப்புழு வளர்ப்பு அறையை சுற்றிலும் பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு கலவையை (1:19 என்ற விகிதத்தில்) தூவி சுகாதாரம் பேண வேண்டும் என்றார் அவர். பட்டுப்புழு வளர்ச்சித்துறை, உதவி ஆய்வாளர் உலகநாதன் விவசாயிகளிடம் கூறியதாவது: மல்பெரி பயிர் செய்ய நீர்ப்பிடிப்பு இல்லாத மேட்டுப் பாங்கான வண்டல் கலந்த செம்மண் சிறந்தது. உயர்விளைச்சல் தரும் வி1 மற்றும் எம்.ஆர் 2 மல்பெரி ரகங்களை இணைவரிசை முறைப்படி நடவு செய்ய வேண்டும் என்றார். மேலும், பட்டுப்புழு வளர்ப்பு குடில் அமைக்க நிலை-1 க்கு ரூ.82,500 மானியம் வழங்கப்படுகிறது. மல்பெரி நடவுக்கு ரூ.10,500 மானியம் அளிக்கப்படுகிறது எனக் கூறினார். இந்தக் கண்டுணர்வு சுற்றுலாவில் "அட்மா' திட்ட தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன், பட்டு வளர்ச்சித்துறை இளநிலை ஆய்வாளர்கள் மற்றும் குணமங்கலம், சுத்தமல்லி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### "அம்மா' பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் பகுதியில் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ், அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது. திருப்பூர், ராவுசாப்பட்டி கிராமங்களில் இருநாட்கள் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு குன்றாண்டார்கோவில் வேளாண் உதவி

இயக்குநர் மு. சங்கரலட்சுமி தலைமை வகித்து பேசுகையில், குறைந்த நீர்த் தேவையில் அதிக மகசூல் தரக்கூடிய சிறுதானிய பயிர்களை சாகுபடி செய்து உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்றார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ந. நிஷா, குழுவாக செயல்படுவது குறித்தும், தொழில்நுட்ப அலுவலர் சு. பால்சாமி மண் மாதிரி எடுப்பதன் அவசியம் குறித்தும், உதவி வேளாண் அலுவலர் அ. சத்தியசீலன் துறை சார்ந்த மானிய திட்டங்கள் குறித்தும் பேசினர். பயிற்சியில் பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் 40 பேர் பங்கேற்றனர். நிறைவாக, அட்மா தொழில்நுட்ப அலுவலர் கா. சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## <u>வனத் துறையில் 2,423 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்</u>

வனத் துறையில் 2,423 காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று, கர்நாடக வனத் துறை அமைச்சர் ரமாநாத்ராய் தெரிவித்தார். கர்நாடக சட்ட மேலவையில் புதன்கிழமை பாஜக உறுப்பினர் விமலா கௌடாவின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது: வனத் துறையில் 11,472 பணியிடங்கள் காலியாக உள்ளன. அதில் 2,423 பணியிடங்களை விரைவில் நிரப்பப்படும். வனத் துறைக்குச் சொந்தமான மரங்கள் உள்ளிட்ட சொத்துகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். தீயினால் மரங்கள் நாசமாவதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும். கோடை காலத்தில் வனங்களில் அதிக அளவு தீ விபத்து ஏற்படுகின்றன. இதைத் தடுக்க வனங்களில் முக்கிய இடங்களில் 50 தீயணைப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முகாம்களிலும் 8 தீயணைப்புப் படை வீரர்கள் பணியாற்று வார்கள். அவர்கள் வனங்களில் ஏற்படும் தீ விபத்துகளை ஆரம்பக் கட்டங்களிலேயே தடுக்க நடவடிக்கை மேற்கொள்வார்கள். அண்மையில் நாகரஹொலே வனப் பகுதியில் நிகழ்ந்த தீ விபத்து குறித்து சிஐடி போலீஸார் விசாரித்து வருகின்றனர். தீ விபத்திற்கு அதிகாரிகளின்

கவனக்குறைவே காரணம் என தெரியவந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரூ.9 லட்சம் மதிப்பில்கொப்பரை விற்பனை

கோபி:கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நே ற்று நடந்த ஏலத்தில், 193 தேங்காய் பருப்பு மூட்ø டகள், ஒன்பது லட்சம் ரூ பாய்க்கு ஏலம் போனது. கோபி ஒழுங்கு முறை விற்பனைக்கூடம், சத்தியமங்கலம் ரோட்டில் இயங்கி வருகிறது. இங்கு வாரந்தோறும் வியாழன் அன்று, கொப்பரை தேங்காய்க்கான ஏலம் நடக்கும். ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்று பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காயை, நேற்று நடந்த ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 98.69 முதல், 101.25 ரூபாய்க்கும், சராசரியாக, 100.45 ரூபா ய்க்கு விலை போனது. மொத்தம், 193 மூட்டை கொப்பரை தேங்காய், ஒன்பது லட்சத்துக்கு ஏலம் போனதாக, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் தெரிவித்தனர்.

### வங்கிகளில் ரூ.6,919கோடி கடன் வழங்க...இலக்கு! வேளாண்மைக்கு அதிக நிதி ஒதுக்கீடு

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில், 2015-16ம் நிதியாண்டில், கல்வி, விவசாயம், சிறு தொழில் என பல்வேறு இனங்களுக்கு, அனைத்து வங்கிகள் மூலம், 6,919 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில், 2015-16ம் ஆண்டுக்கான வங்கிகள் கடன் திட்ட அறிக்கை வெளியிடப் பட்டது.கலெக்டர் பிரபாகர் பேசியதாவது:நபார்டு வங்கி வளம் சார்ந்த

அறிக்கைப்படி, இம்மாவட்ட முன்னோடி வங்கியான கனரா வங்கி மூலம், கடன் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. விவசாய முக்கியத் துவம் வாய்ந்த மாவட்டமாக இருப்பதால், ஆண்டு கடன் திட்ட அறிக்கையில் அதிகபட்சமாக, வேளாண்மை துறைக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில், 2015-16ம் ஆண்டில் கல்வி, விவசாயம், சிறு தொழில் என பல்வேறு இனங்களுக்கு அனைத்து வங்கிகள் சார்பில், 6,919 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் விவசாயிகளுக்கு கடன் வழங்க, 3,702 கோடி, சுய உதவி குழு உட்பட சிறு, குறு தொழில் வளர்ச்சிக்காக, 1,909 கோடி, கல்வி கடன், வீட்டு கடன் உட்பட பிற இனங்களுக்கு, 1,308 கோடி என மொத்தம், 6,919 கோடி ரூபாய் அளவில் கடன் வழங்குவதற்கு, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டை விட, 910 கோடி ரூபாய் அதிகமாகும், என்றார்.கடன் திட்ட அறிக்கையை கலெக்டர் வெளியிட, ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் சரவணன் பெற்று கொண்டார்.கோவை வட்ட அலுவலக கனரா வங்கி பொது மேலாளர் சுரேஷ் குமார், முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சந்தானம், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் ராமதாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.மகளிர் குழுக்களுக்கு அதிகளவில் கடன் வழங்கிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கனரா வங்கி ஆகியவற்றுக்கு கேடயம், பாராட்டு சான்று வழங்கப்பட்டது.அதிகளவில் மகளிர் குழுக்களுக்கு கடன் வழங்கிய வங்கி கிளை மேலாளர்களுக்கு, ரொக்க பரிசாக, 90 ஆயிரம் ரூபாய் மற்றும் சான்றிதழ்களையும், மாவட்ட தொழில் மையம் மூலம் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம், பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்

ஆகியவற்றுக்கு அதிகளவில் கடனுதவிகள் வழங்கிய வங்கிகளுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## கோமாரி தடுப்பூசி முகாம்

திண்டிவனம்: விட்டலாபுரம் கிராமத்தில் மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டது. திண்டிவனம் அடுத்த விட்டலாபுரம் ஊராட்சியில், கால்நடை பராமரிப்புத் துறை, சர்வீஸ் அரிமா சங்கம் சார்பில் மாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு ஊசி முகாமை நடத்தினர். கால்நடை மருத்துவர் செங்குட்டுவன் தலைமையில் ஆய்வாளர் கஸ்தூரி ரங்கன், உதவியாளர் இருசன் ஆகியோர் 400 மாடுகளுக்கு தடுப்பூசி போட்டனர். சர்வீஸ் அரிமா சங்க தலைவர் ஆனந்த், செயலர் ஆனந்த குமார், நூருல்லா, சக்திவேல், ரவிச்சந்திரன், குமார், பாரிநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தக்காளி, வெங்காயம் சாகுபடி பரப்பும் விளைச்சலும் அதிகரிப்பு

தேனி : தேனி மாவட்டத்தில் தக்காளி, வெங்காயம் சாகுபடி பரப்பும், விளைச்சலும் அதிகரித்துள்ளது, என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தேனி மாவட்டத்தில் தக்காளி விலை கிலோ 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்பட்டு வந்தது. அதேபோல் வெங்காயம் கிலோ 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்பட்டது. இந்நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தக்காளி விலை கிலோவிற்கு 10 ரூபாய்க்கும் கீழ் விற்பனை செய்யப்படுகிறது. வெங்காயம் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. சில நாட்களில் விவசாயிகளுக்கு தக்காளிக்கு கிலோ 4 ரூபாய் கிடைப்பதும், வெங்காயத்திற்கு 8 ரூபாய் கிடைப்பதும் சிரமமான விஷயமாக உள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: மாவட்டத்தில் கடந்த ஆண்டு மழை அதிகம் பெய்தது. அப்போது தக்காளி, வெங்காயம் விலை அதிகம் இருந்தது.எனவே விவசாயிகள், வெங்காயம், தக்காளி சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டினர். கடமலைக்குண்டு, மயிலாடும்

பாறை, ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, அரைப்படித்தேவன்பட்டி, தேவாரம், உத்தமபாளையம், போடி உட்பட பல பகுதிகளில் வெங்காயம், தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இதற்கிடையில் மழை குறைந்து வெயில் அதிகரித்துள்ளதால், தற்போது தக்காளி செடிகளில் காய்ப்பு அதிகரித்துள்ளது. வெங்காயம் வரத்தும் சந்தைக்கு அதிகரித்துள்ளது. எனவே தேனி மார்க்கெட்டில் முதல்தரமான வெங்காயம் விலை கிலோ 15 ரூபாய், இரண்டாம் ரகம் 10 ரூபாய், தக்காளி 5 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. சாகுபடி பரப்பும், விளைச்சலும் அதிகரித்துள்ளதே விலை குறைய காரணம். என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>உரம் தேவை அதிகரிப்பு</u>

தேனி : தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, போடி ஒன்றியங்களில் உரத்தின் தேவை அதிகரித்துள்ளது.கம்பம், உத்தம பாளையம், சின்னமனூர், கடமலைக்குண்டு ஒன்றியங்களில் இரண்டாம் போக நெல் அறுவடை நடந்து வருகிறது. ஆனால் தற்போது ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, போடி ஒன்றியங்களில் மானாவாரி பயிர்கள், பயறு வகை பயிர்கள் விதைப்பு பணி காணப்படுகிறது. இதனால் உரங்களின் தேவை அதிகரித்துள்ளது. தேவைக்கு ஏற்ப இப்பகுதிகளில் உரங்களை இருப்பு வைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்</u>

நங்கவள்ளி:நங்கவள்ளி யூனியன், சாணாரப்பட்டியில், பண்ணைப் பள்ளி விவசாயிகள், 25 பேருக்கு, இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி முகாம் நடந்தது.விவசாயிகளுக்கு, மண்புழு உரம் தயாரித்தல், ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்தல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டது. நங்கவள்ளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்

செந்தில்குமார், சேலம் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் சரஸ்வதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகிர்தா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.55 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்:நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 55 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது.நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது.ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 3,500 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,581, குறைந்தபட்சமாக, 4,106 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 5,052, குறைந்த பட்சமாக, 4,409 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,409, குறைந்த பட்சமாக, 3,916 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 55 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## கறவை மாடு, பால் உற்பத்திதிறன் மேம்பாட்டு பயிற்சி

தர்மபுரி,:தர்மபுரி மாவட்ட, பால் உற்பத்தியாளர்களுக்கு, கறவை மாடு வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி குறித்த, திறன் மேம்பாட்டு பயிற்சி, தர்மபுரியை அடுத்த குண்டல்பட்டி கால்நடை ஆராய்ச்சி மையத்தில் நடந்தது.ஆவின் சேர்மன் தென்னரசு தலைமை வகித்தார். மாவட்ட திட்ட இயக்குனர் ஸ்ரீதர் பேசியதாவது:மத்திய அரசின் நிதிஉதவியுடன், தேசிய கால்நடை மேம்பாட்டுத்திட்டம், 2014-2015 கீழ், ஆவின் கூட்டுறவு சங்க

முன்னோடி பால் உற்பத்தியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, தர்மபுரி மாவட்டத்திலுள்ள, ஏழு ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒன்றியத்துக்கு, 50 நபர்கள் வீதம், 350 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இதில், பென்னாகரம் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களைச் சார்ந்த, 100 உறுப்பினர்களுக்கு, இன்று பயிற்சி வழங்கப்படுகிறது. இதில், கலந்து கொள்ளும் பால் உற்பத்தியாளார் களுக்கு, பயிற்சிக்கான கையேடு சான்றிதழ் மற்றும் மதிய உணவு, போக்குவரத்து கட்டணம் இலவசமாக வழங்கப்படுகிறது.பயிற்சியில், பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடு தேர்வு, பராமரிப்பு, தீவன மேலாண்மை, அடர் தீவனம், தாது உப்புக் கலவை, இனப்பெருக்கம், கருவூட்டல், கன்று வளர்ப்பு, பசுந்தீவன வளர்ப்பு, கடற்பாசி (அசோலா) வளர்ப்பு, ஊறுகாய் புல் தயாரித்தல், யூரியாவைக் கொண்டு வைக்கோலை செறிவூட்டுதல், சுத்தமான, சுகாதாரமான பால் உற்பத்தி பற்றிய திறன் மேம்பாட்டு ஒருநாள் பயிற்சி நடத்தப்படுகிறது.இவ்வாறு அவர் பேசினார்.கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய துறைத் தலைவர் டாக்டர் செந்தில்வேல், ஆவின் பொதுமேலாளர் செல்வகுமார், ஆவின் துணைத் தலைவர் பெரியசாமி, துணைபொது மேலாளர் டாக்டர் பசவராஜ், பால்வள மேலாளர் டாக்டர் நாகராஜ், துணைப் பதிவாளர் தனபால், கால்நடை பேராசியர் டாக்டர் மீனலோசனி உட்பட, பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி அதிகரிப்பு</u>**



புதுடெல்லி : இந்தியாவில் இருந்து மிளகு, சீரகம், தனியா, ஏலக்காய், மஞ்சள், இஞ்சி, பூண்டு, மிளகாய், கடுகு, புளி உள்ளிட்ட நறுமண, மசாலா பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 20122013ம் ஆண்டில் ரூ.12,112.76 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த 20132014ம் ஆண்டில் 13.4 சதவீதம் அதிகரித்து ரூ.13,735.39 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை இந்திய நறுமணப்பொருட்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளது.

**<u>தமிழகத்திலேயே நாமக்கல் மாவட்டத்தில் தான் மஞ்சளுக்கு அதிக விலை</u>**

நாமகிரிப்பேட்டை, : இந்தியாவில் ஆலப்புலா, சாங்லி, நிஜாம்பாத், ராஜ்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, நாமகிரிப்பேட்டை ஆகிய பகுதிகளில் மட்டுமே மஞ்சளுக்கு பெரிய அளவில் மார்க்கெட் உள் ளது. தமிழகத்தில் ஈரோட்டிற்கு அடுத்து நாமகிரிப்பேட்டையில் தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளன. வாரந்தோறும் செவ்வாய்கிழமையன்று நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடக்கும். ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்) உட்பட 16 தனியார் மண்டிகள் உள்ளன. இங்கு, நாமகிரிப்பேட்டை, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, முள்ளுக்குறிச்சி உட்பட சுற்றுவட்டார விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். சக்திமசாலா. ஆச்சி மசாலா உட்பட பல்வேறு நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை

வாங்கி செல்கின்றனர். அதுமட்டுமின்றி பல்வேறு தனியார் வியாபாரிகளும் மஞ்சளை வாங்கி வெளிமாநிலம், நாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். இந்தியாவில் பொறுத்தவரை தமிகத்தில்தான் தரமான மஞ்சள் விளைகிறது. முக்கியமாக நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மஞ்சளுக்கு எப்போதுமே விலை அதிகம். ஆந்திரா, கர்நாடக மாநிலத்தில் அதிகளவு மஞ்சள்விளைந்தாலும், விலை குறைவாக இருந்தாலும் நாமக்கல் மாவட்ட மஞ்சளுக்கு எப்போதுமே மவுசு அதிகம். மார்ச் மாதத்தில் மஞ்சள் விலை நிலவரப்படி, நாமகிரிப்பேட்டை, திருச்செங்கோடு மார்க்கெட்டில் மட்டுமே மஞ்சள் மூட்டை ரூ10 ஆயிரத்திற்கு அதிகமாக விற்பனையாகியுள்ளது. திருச்செங்கோடு மார்க்கெட்டில் மார்ச் 3ம் தேதி அதிகபட்ச விலையாக விரலி மூட்டை ரூ10,890க்கு விற்பனையானது. நாமகிரிப்பேட்டையில் அதிகப்பட்சமாக விரலி மூட்டைரூ10,404க்கு விற்பனையாகியுள்ளது. மற்ற மார்க்கெட்டில் மஞ்சள் விலை ரூ10 ஆயிரத்தை தாண்டவில்லை. தரம் நிறைந்தது உலகத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பில் இந்தியாவுக்கு 5வது இடமாக இருந்தாலும் உற்பத்தியில் 2வது இடத்தை பிடித்துள்ளது. ஆனால் தரத்தில் இந்திய மஞ்சளுக்கு தான் முதலிடம். அதிலும் தமிழகத்தில் ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, ஈரோடு பகுதிகளில் விளையும் மஞ்சள் முதல்தரமானவை. இந்திய அளவில் பெரிய மஞ்சள் மார்க்கெட் ஆன ஆந்திர மாநிலம் நிஜாமாபாத்தில் ஈரோடு, சேலம் மஞ்சள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இங்கு வாங்கப்படும் மஞ்சள் சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மருந்து, ரசாயனம், அழகுசாதன பொருட்கள், பெயிண்ட் நிறம், நறுமண எண்ணெய் ஆகியவற்றுக்கு இந்திய மஞ்சள் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது.

## 1,747 வாழைத்தார் ரூ.1.42 லட்சத்துக்கு ஏலம்

திருச்சி, : திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் 1,747 வாழைத்தார்கள் ரூ 1.42 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. எந்தவித தரகுமின்றி அன்றே விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. கிளியநல்லூர், சிறுகாம்பூர், சென்னக்கரை, செங்குடி, குழுமணி, லால்குடி, அந்தநல்லூர், பெட்டவாய்த் தலை, பெருகமணி, குளித்தலை, தொட்டியம் ஆகிய கிராமங்களிலி ருந்து 41 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண் டனர். பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட், சீத்தலைவாய், நம்பியூர், மணப்பாறை ஆகிய ஊர்களிலிருந்து மொத் தம் 18 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத்தார் களை ஏலம் எடுத்தனர். இந்த ஏலத்தில் ரஸ் தாலி அதிகபட்சமாக ரூ.245க்கும், பூவன் அதிகபட்சமாக ரூ.230க்கும், பச்சலாடன் தார் அதிகபட்சமாக ரூ.210க்கும், கற்பூரவள்ளி அதிக பட்சமாக ரூ.185க்கும், மொந் தன் ரூ. 135க்கும், ஏலா ரிசி அதிகபட்சமாக ரூ.170க்கும், நேந்திரன் அதிகபட்சமாக ரூ.245க் கும் ஏலம் போனது. அடுத்த ஏலம் வரும் 31ம் தேதி நடைபெறும்.

## திருச்சியில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி, : திருச்சி மாவட்ட விவசாயிகள் குறை தீர் நாள் கூட்டம் கலெ க்டர் அலுவலக கூட்டமன் றத்தில் நாளை (27ம்தேதி) காலை 10.30 மணியளவில் நடை பெறுகிறது. விவசாயிகள், விவசாய சங்கங்கள் பிரதிநிதி கள் கலந்து கொண்டு நீர்ப் பாசனம், வேளாண்மை இடு பொருட்கள், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுத வி கள், விவசாய மேம்பாட்டிற் கான நலத் திட்டங்கள் குறி த்து நேரிலோ அல்லது மனுக்

கள் மூலம் தெரிவிக்கலாம் என கலெக்டர் பழனிசாமி கேட் டுக் கொண்டுள்ளார்.

## அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர், :அரியலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது என கலெக்டர் தெரிவித்துள்ளார். அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை:அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மன்றத்தில் நாளை (27ம் தேதி) பகல் 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், கடன் உதவிகள், இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுடன் விவாதிக்கப்படும். எனவே, அன்றைய தினம் விவசாய சங்க பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என கலெக்டர் அதில் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில்நுட்ப பயிற்சி

கமுதி, : கமுதி அருகே பேரையூரில் வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட் டன.கமுதி வட்டாரம் பேரையூர் கிராமத்தில் வேளாண்மை அறிவியல் தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டம் 2014-15ம் ஆண்டு திட்டத்தின் கீழ் பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. பயிற்சியில் சிறுதானியங்கள் மதிப்பு கூட்டுதல் பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பாலமுருகன் பயிற்சி, விளக்கம் அளித்தார். மேலாண்மை அறிவியல் மையம் மனையியல்துறை பேராசிரியர் மீனாட்சி செயல் விளக்கம் அளித்தார். நவீன தொழில் நுட்பங்கள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் நடராஜன்

விளக்கமளித்தார். ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஈஸ்வரி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன்மலர்செல்வி, பாரதீஸ்வரி செய்திருந்தனர். நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட வட்டார விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் குழு உறுப்பினர்களும் கலந்து கொண் டனர்.

**<u>வத்திராயிருப்பு பகுதியில் விவசாயிகளுக்கு பயிற்சி திட்டம்</u>**

வத்திராயிருப்பு, : வத்திராயிருப்பு பகுதியில் தம்பிபட்டி குன்னூர் சுந்தரபாண்டியம் ஆகிய ஊர்களில் விதை கிராம பயிற்சித் திட்டம் நடைபெற்றது. இப்பயிற்சியில் ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் தலா 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியில் தரமான விதை உற்பத்தி முறைகள் பயறு மற்றும் சிறு தானியங்கள் சாகுபடி, தொழில்நுட்பங்கள் முறையாக பயிற்றுவிக்கப்பட்டது. பயிற்சியில் வத்திராயிருப்பு துணை இயக்குனர் பூவலிங்கம், வேளாண்மை உதவி இயக்குனர் பாண்டித்துரை, விதை சான்று உதவி இயக்குனர் ராமமூர்த்தி, விதைச்சான்று அலுவலர் சுரேஷ், வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி, துணை வேளாண்மை அலுவலர் சீனிவாசன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமன், முத்துசரவணன், சுந்தரம், பாலகுரு, கதிரேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். இப்பயிற்சி மிகவும் உதவியாக இருந்ததாக, விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>மாம்பழம் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு மல்கோவா ரகம் கிலோ ரூ.75 க்கு விற்பனை</u>



கோவைக்கு மாம்பழம் வரத்து அதிகரித்து இருப்பதால், விலை சரிய தொடங்கியுள்ளது.

மாம்பழம்வரத்துஅதிகரிப்பு

கோவை நகருக்கு பல்வேறு இடங்களில் இருந்து மாம்பழம் வருகிறது. கேரள மாநிலம் செம்மனாம்பதி, சித்தூர், வடக்கஞ்சேரி மற்றும் பொள்ளாச்சி ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், ஆழியார் உள்ளிட்ட பகுதியில் இருந்தும், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் இருந்தும் கோவை பழ மார்க்கெட்டுக்கு தினமும் 5 டன்வரை லாரிகள் மூலம் வருகிறது. மாம்பழ விளைச்சல் அதிகரித்து இருப்பதால் தற்போது 7 முதல் 10டன் வரை வரத்து உயர்ந்துள்ளது. விலைகுறைய தொடங்கியது இதனால் கடந்த வாரம் கிலோ ரூ.120-க்கு விற்பனை செய்யப்பட்ட மல்கோவா ரக மாம்பழம் ரூ.45 குறைந்து ரூ.75-க்கு விற்றது. இதேபோல் மற்ற மாம்பழ விலை விவரம் வருமாறு:- செந்தூரம் கிலோ- ரூ.60, இமாம்பசந்த்-ரூ.60, யுதாதாத்-ரூ.60, பங்கனம்பள்ளி-ரூ.75, நீலம்-ரூ.50, அல்போன்சா-ரூ.120, கோமாங்காய் -ரூ.75, நடுசாலை-ரூ.75, கிளிமூக்கு-ரூ.75 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து உக்கடம் பழ மார்க்கெட் வியாபாரி கூறும்போது, மார்ச் முதல்

மேமாதம்வரை மாம்பழ சீசன் இருக்கும். கோடை மழை சரியாக பெய்தால் விளைச்சல் மேலும் அதிகரித்து மே, ஜுன் மாதங்களில் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.
மாநகராட்சிஅதிகாரிகள்கண்காணிப்பு

கோவையில் மாம்பழம் வரத்து அதிகரித்துள்ள நிலையில், 'கார்பைட்' கல்லை வைத்து மாங்காய்களை பழுக்க வைப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி சுகாதார பிரிவு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த கல் மூலம் பழுக்க வைத்த மாம்பழங்களை சாப்பிட்டால் வயிற்றுபோக்கு உள்ளிட்ட உபாதைகள் ஏற்படும். இதனால் மாம்பழ குடோன்கள் கண்காணிக்கப்பட்டு சோதனை நடத்தப்படும் என்றும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கண்காட்சியில் பார்வையாளர்களை கவர்ந்த புலிக்குளம் இன மாடுகள் திண்டுக்கல் காளையும், பசுவும் முதல் பரிசை தட்டிச்சென்றன**



திண்டுக்கல், திண்டுக்கல் நடந்த கண்காட்சியில், புலிக்குளம் இன மாடுகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன. கண்காட்சியில் திண்டுக்கல்லை சேர்ந்த காளையும், பசுவும் முதல் பரிசை தட்டிச்சென்றன.

<u>மாடுகள் கண்காட்சி</u>

தமிழ்நாட்டில் அழிந்து வரும் பட்டியலில் இடம்பெற்றுள்ள 5 பழம்பெரும் நாட்டு இன மாடுகளில் புலிக்குளம் இனமும் ஒன்று. சிவகங்கை மாவட்டம் புலிக்குளத்தை பூர்வீகமாக கொண்ட இந்த இன மாடுகளை பாதுகாக்க கண்காட்சி நடத்த தமிழக அரசு முடிவு செய்தது. அதன் ஒருபகுதியாக புலிக்குளம் இன மாடுகளின் கண்காட்சி திண்டுக்கல்

முத்தழகுபட்டியில் நடந்தது. இதில், மாவட்டம் முழுவதும் இருந்து ஏராளமான மாடுகள் பங்கேற்றன. மாட்டின் உரிமையாளர்கள், மாட்டு கொம்பை சீவி, மாட்டுக்கு மாலை அணிவித்து, கலர் பொடிகளை தூவி அழைத்து வந்திருந்தனர்.

<u>திண்டுக்கல் மாடுகளுக்கு முதல் பரிசு</u>

கண்காட்சியில் நல்ல உடல் தகுதியை கொண்ட பசுக்கள், காளைகள் சிறந்தவையாக தேர்ந்தெடுக்கப்பட்டன. காளைகளில், முத்தழகுபட்டியை சேர்ந்த பங்கிராஜ் என்பவரின் காளையும், பசுக்களில் தவசிமடையை சேர்ந்த அந்தோணி என்பவரின் பசுவும் முதல் பரிசு பெற்றன. இந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு தலா ரூ.20 ஆயிரத்தை கலெக்டர் ஹரிகரன் வழங்கினார். இதேபோல், 2–வது பரிசு மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த கண்காட்சியை திண்டுக்கல் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பலரும் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

<u>குறைந்து வரும் எண்ணிக்கை</u>

கண்காட்சியை தொடர்ந்து, புலிக்குளம் மாடுகள் குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் பயிற்சி மையத்தின் பேராசிரியர் திலக்பொன்ஜவகர் கலந்துகொண்டு பேசினார். அவரிடம் புலிக்குளம் இன மாடுகள் குறித்து கேட்டபோது, அவர் கூறியதாவது:–

புலிக்குளம் இன மாடுகள் நமது நாட்டின் பாரம்பரிய மாட்டினங்களில் ஒன்று. இவை, சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் பரவலாக வளர்க்கப்படுகின்றன. தற்போதைய நிலையில், புலிக்குளம் இன மாடுகள் சுமார் 45 ஆயிரம் அளவில் இருக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது. லட்சக்கணக்கில் இருந்த இந்த மாடுகளின் எண்ணிக்கை தற்போது குறைந்து வருகிறது.

<u>அழிவில் இருந்து பாதுகாக்க...</u>

பொதுமக்கள் வணிக நோக்கில் செயல்படுவதால், கலப்பின பசுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதேபோல், நவீன எந்திரங்களின் வருகையால் உழவு மாடுகள் மற்றும் வண்டி மாடுகளின் பயன்பாடு குறைந்து விட்டது. தற்போது, பலரும் நாட்டு இன மாடுகளை வளர்க்க ஆர்வம் காட்டுவது இல்லை. இதனால், நாட்டு மாடுகள் அழிவை சந்தித்து வருகின்றன. புலிக்குளம் இன மாடுகளை பொறுத்தவரை எந்த தட்பவெப்ப நிலையையும் தாங்கும் தன்மை உடையது. இதனால், அந்த மாடுகளை எளிதில் நோய் தாக்குவது இல்லை. அவற்றுக்கு வைத்தியம் பார்க்க வேண்டிய அவசியம் பெரும்பாலான நேரங்களில் வருவது இல்லை.

<u>பராமரிப்பு செலவு</u>

கலப்பின பசுக்களை பராமரிக்க வேண்டிய செலவு அதிகம். அதிக தீவனம் வைத்தால் தான், அவை அதிக பால் தரும். ஆனால், புலிக்குளம் மாடுகள் கிடைப்பதை உண்டு வாழும். அதிகபட்சமாக சுமார் 3 லிட்டர் வரை பால் கறக்கும். கலப்பின பசு பாலை விட, நாட்டு பசுவின் பாலில் ஊட்டச்சத்துகள் அதிகம். இதில், அதிக அளவு உடலுக்கு நன்மை பயக்கும் கொழுப்புச்சத்து உள்ளது. மேலும், இவற்றின் பால் சுவை மிக்கது. இதனால், கலப்பின பசுக்களை விட இவற்றை வளர்ப்பது நல்லது. இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில், வருவாய் அலுவலர் நாகேந்திரன், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் விக்டர் ஜெபராஜ், கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் பீர்முகமது, கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குனர் வினிதா, கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

<u>ஜல்லிக்கட்டு தடையால் அடிமாட்டு விலைக்கு விற்கப்படும் காளைகள்</u>

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகை, கோவில் திருவிழாக்களையொட்டி பல்வேறு மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு விழா நடத்தப்பட்டு வந்தது.

இந்த ஜல்லிக்கட்டு விழாவில் பயன்படுத்தப்படும் மாடுகளில் பெரும்பாலானவை புலிக்குளம் இனத்தை சேர்ந்தவையாகும். திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 18–க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஜல்லிக்கட்டு திருவிழா நடந்து வந்தது. ஜல்லிக்கட்டுக்கு கோர்ட்டு தடை விதித்ததால் காளைகளை வளர்த்து வந்த பலரும் அவற்றை விற்க தொடங்கி விட்டார்கள். அவற்றுக்கு சந்தையில் போதிய விலையும் கிடைப்பதில்லை. இதனால், பலரும் அடிமாட்டு விலைக்கு இறைச்சிக்காக அவற்றை விற்க தொடங்கி விட்டார்கள். இதனால், புலிக்குளம் இனம் மேலும் அழிவை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், தமிழக அரசு அவற்றை பாதுகாக்க புதிய திட்டத்தை வகுத்துள்ளது. எனினும், புலிக்குளம் போன்ற நாட்டு இன மாடுகளின் நன்மைகளை தெரிந்து கொண்டு, பொதுமக்கள் தாமாக அவற்றை வளர்க்க ஆர்வம் காட்டினால் மட்டுமே நாட்டு மாடுகளை பாதுகாக்க முடியும் என கால்நடை பராமரிப்பு துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## எழுமாத்தூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.2¼ லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்



மொடக்குறிச்சி, மொடக்குறிச்சி அருகே உள்ள எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை தேங்காய் ஏலம் நேற்று நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 98 மூட்டைகளில் 2½ டன் எடையுள்ள கொப்பரை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 74 ரூபாய் 69 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 62 ரூபாய் 50 காசு முதல் 94 ரூபாய் 30 காசு வரை ஏலம்

எடுக்கப்பட்டது. மொத்தம் ரூ.2லட்சத்து 33ஆயிரத்து 347–க்கு கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இதேபோல் 5டன் எடையுள்ள 15 ஆயிரத்து 410 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டது. இது குறைந்த பட்ச விலையாக 34 ஆயிரத்து 562 ரூபாய் முதல் 26 ஆயிரத்து 700 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.1லட்சத்து 54ஆயிரத்து 869–க்கு தேங்காய் விற்பனை ஆனது.

**<u>கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.6 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்</u>**



கோபி, கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.6 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது.

<u>கொப்பரை தேங்காய் ஏலம்</u>

கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெறும். அதன்படி கொப்பரை தேங்காய் ஏல விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மதேந்திரசிங் தலைமையில் நேற்று நடந்தது. கோபி மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளை சேர்ந்த 45 விவசாயிகள் 193 மூட்டைகளில் கொப்பரை தேங்காயை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

கொப்பரை தேங்காய் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக 98 ரூபாய் 69 காசுக்கும், அதிகபட்ச விலையாக 101 ரூபாய் 25 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் கொப்பரை தேங்காய் ரூ.6 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

<u>எழுமாத்தூர்</u>

இதேபோல் மொடக்குறிச்சி அருகே உள்ள எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் நேற்று நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளை

சேர்ந்த விவசாயிகள் 98 மூட்டைகளில் 2½ டன் எடையுள்ள கொப்பரை தேங்காயை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 74 ரூபாய் 69 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 62 ரூபாய் 50 காசு முதல் 94 ரூபாய் 30 காசு வரை ஏலம் எடுக்கப்பட்டது. மொத்தம் ரூ.2 லட்சத்து 33ஆயிரத்து 347–க்கு கொப்பரை தேங்காய் ஏலம் நடை பெற்றது. இதேபோல் 5 டன் எடையுள்ள 15ஆயிரத்து 410 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டது. இது குறைந்த பட்ச விலையாக 26 ஆயிரத்து 700 ரூபாய்க்கும் அதிகபட்ச விலையாக 34 ஆயிரத்து 562 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 54ஆயிரத்து 869–க்கு தேங்காய் விற்பனை ஆனது.

## <u>நொய்யல் பகுதிகளில் வெயில் தாக்கம் அதிகரிப்பால் நுங்கு விற்பனை அமோகம்</u>



நொய்யல் பகுதிகளில் வெயில் தாக்கம் அதிகரிப் பால் நுங்கு விற்பனை அமோகமாகநடைபெற்றுவருகிறது.

கோடைக்காலம்

கோடைக்காலம் தொடங்கி யதில் இருந்தே கடும் வெயில் வாட்டி வருகிறது. இதனால் பகலில் பொதுமக்கள் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கி கிடந்து வருகின்றனர். கோடை க்காலம் தொடங்கினாலே சாலை ஓரங்களில் நுங்கு விற் பனை சூடு பிடிப்பது வழக்கம். இந்தநிலையில் தற்போது நுங்கு வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சாலையோரங்களில் இதன் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. கரூர் மாவட்டம், நொய்யல், புன்னம்சத்திரம், பவித்திரம், புன்னம் உள்ளிட்ட இடங்களில் இருந்து நுங்கு வரத்து அதிகரித்து

உள்ளது. இப்பகுதியில் இருந்து நொய்யல், புன்னம்சத்திரம், வேலாயுதம்பாளையம், புகழூர் சுற்றுவட்டார பகுதிகளில் நுங்கு வியாபாரிகள் அதிக அளவில் நுங்குகளை வாங்கி சென்று விற்பனை செய்துவருகின்றனர்.

விற்பனைஅமோகம்

வியாபாரிகள் 3 நுங்குகளை ரூ.10–க்கு விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து நுங்கு வியாபாரி ஒருவர் கூறுகையில், வழக்கத்தை விட முன்பே நுங்கு வரத்து அதிகரித்து உள்ளது. கோடைக்காலம் என்பதால் நுங்கு விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி சாப்பிட்டு விட்டும், வீடுகளுக்கு நுங்குகளை வாங்கியும் செல்கின்றனர். வெயில் காலங்களில் நுங்கு அதிக அளவில் சாப்பிட்டால் சூடு தணியும், மேலும் உடல் நலத்திற்கு நல்லது என்றார்.

பல்வேறுபயன்கள்

நுங்கில் வைட்டமின்–பி, வைட்டமின்–சி, இரும்புச்சத்து, கால்சியம், துத்தநாகம், சோடியம், மக்னீசியம், பொட்டாசியம், தயாமின், அஸ்கார்பிக், அமிலம், புரதம் போன்ற சத்துக்கள் அதிகம் உள்ளது. மேலும், நுங்குக்குக் கொழுப்பை கட்டுப்படுத்தி உடல் எடையை குறைக்கும் தன்மை அதிகம் உள்ளது. உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் உணவு கட்டுப்பாட்டுடன் நுங்கை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். நுங்கு நீர் வயிற்றை நிரப்பி பசியையும் தூண்டும், மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் போக்குக்கு நுங்கு சிறந்த மருந்து. சிலருக்கு உடல் உஷ்ணம் காரணமாக எவ்வளவுதான் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. அவர்கள் நுங்கை சாப்பிட்டால் தாகம் அடங்கிவிடும். ரத்தசோகை உள்ளவர்கள் நுங்கை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைவில் குணமாகி உடல் சுறுசுறுப்பாகும். மேலும், வெயில் காலத்தில் ஏற்படும் அம்மை நோய்கள் வருவதை தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தருகிறது. இப்படி எண்ணற்ற சிறப்புகளை கொண்ட இந்த

நுங்கை பொதுமக்கள் வெயிலில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்ள விரும்பி சாப்பிடுகின்றனர்.

## ரூ.55 லட்சத்துக்கு பருத்தி ஏலம்



நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 3 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.55 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 916 முதல் ரூ.4 ஆயிரத்து 409 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 106 முதல் ரூ.4 ஆயிரத்து 581 வரைக்கும், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 409 முதல் ரூ.5 ஆயிரத்து 52 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.